

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (6.8.2025) முகாம் அலுவலகத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல்.திருமாவளவன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ. சண்முகம் ஆகியோர் சந்தித்து உடல்நலம் குறித்து விசாரித்தனர். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணை பொதுச் செயலாளர் வன்னியரசு, தலைமை நிலையச் செயலாளர் பாலசிங்கம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் சாமுவேல்ராஜ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மநில செயற்குழு உறுப்பினர் சந்தானம் ஆகியோர் உள்ளனர்.




கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.8.2025)சென்னை அண்ணா அறிவாலயத்தில், “உடன்பிறப்பே வா” என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக நிர்வாகிகளைச் சந்திக்கும் நிகழ்வில் மதுரை மாவட்டம் திருமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாகச் சந்தித்து பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (6.8.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், Social Democratic Party of India (SDPI) கட்சியின் மாநிலத் தலைவர் நெல்லை முபாரக் சந்தித்து உடல்நலம் குறித்து கேட்டறிந்தார். இந்நிகழ்வின்போது, மாநகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ் பாரதி, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், SDPI கட்சியின் மாநில துணைத் தலைவர்கள் அப்துல் ஹமீத், அச உமர் பாரூக், மாநில பொதுச் செயலாளர்கள் நிஜாம் மொய்தீன், ஏ.கே. அப்துல் கரீம், தலைமை நிலைய செயலாளர் முஹம்மது ரஷீத், மத்திய சென்னை மாவட்ட தலைவர் முஹம்மது இஸ்மாயில் ஆகியோர் உடனிருந்தனர்.



பழம்பெரும் நடிகை திருமதி எம்.என்.ராஜம் அவர்கள் தனது 90–வது பிறந்தநாளையொட்டி நாளிதழுக்கு அளித்த பேட்டி ஒன்றில், முதலமைச்சர் அவர்களை சந்திக்க விரும்புவதாக தெரிவித்திருந்தார். அவரது விருப்பத்தை நிறைவேற்றிடும் வகையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.8.2025) சென்னை, அடையாறிலுள்ள பழம்பெரும் நடிகை திருமதி எம்.என்.ராஜம் அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று, பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்து, பேசினார். இந்நிகழ்வின்போது, திருமதி துர்கா ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ்.முருகன், திருமதி எம்.என். ராஜம் அவர்களின் மகன் பிரம்ம லஷ்மன் மற்றும் அவரது குடும்பத்தினர் உடனிருந்தனர்.

